ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

ஏப்ரல் 2017

வேணு 22; கானம் 9




மஹாரண்யம்
ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும்
தெய்வீக மாதப் பத்திரிகை

தனி பிரதி Rs 15
ஆண்டு சந்தா Rs 180

Delivered by India Post - www.indiapost.gov.in



பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் முன்னிலையில் நடந்த ப்ரேமிக வித்யா கேந்திராவின் ஆண்டு விழா, குருக்ராம் 28 Feb - 2 March



# பொருளடக்கம்


5 மதுரமான மஹனீயர் - 253

8 கேள்வி பதில்

9 ப்ரேமிக பவனம் உதயம் - 5

12 பக்தி சுகந்தம் - 1

14 நாம பரதே ஸாதன நாஹி

17 நாமமே நமது குருவாகும்போது - 4

20 ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஜெயந்தி

33 பாலகர்களுக்கு ஒரு கதை

35 மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

37 பாரம்பரிய பொக்கிஷங்கள்

39 படித்ததில் பிடித்தது


40 புராநவா



மதுரமுரளி

வேணு 22; கானம் 9


ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே



# மதுரகீதம்

## நீ இருக்கும் இடத்தில் கண்ணன்

**ராகம்:** சாரமதி

**தாளம்:** ஆதி

### பல்லவி

**நீ இருக்கும் இடத்தில் கண்ணன்**
**இருப்பான் அன்றோ - துளசி மாதாவே**

### அனுபல்லவி

**பிறக்கும் பொழுதே திவ்ய ஸ ுகந்தத்துடன்**
**பிறக்கும் பவித்ர தேவியே**

### சரணம்

**அன்று கோபியர்களை விட்டு பிரிந்த**
**கண்ணனை காட்டி கொடுத்தது நீயன்றோ**
**இன்று கண்ணனை பிரிந்து வாடும்**
**எந்தனுக்கும் அவனை காட்டி தந்திடுவாயே தாயே**


---

**முன் அட்டை:**

ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஜெயந்தி, சென்னை

**பின் அட்டை:**

தூத்துக்குடி நாமத்வார்






# மதுரமான மஹநீயர்

**Dr ஆ பாக்யநாதன்**

திருநெல்வேலிக்கு அருகாமையில் உள்ள அம்பாசமுத்திரத்தில் பல வருடங்களாக நாமத்வார் நடந்து வருகின்றது. ஸ்ரீ ரமணன் அவர்கள்தான் நாமத்வாரின் பொறுப்பாளர். அவருடைய அயராத பிரசாரத்தினால் அம்பை நாமத்வாரைச் சுற்றிப் பல கேந்திராக்கள் ஏற்பட்டு நாமப்ரசாரம் அமோகமாக நடந்து வருகின்றது. அந்த ஊரில் ஸ்ரீ குமார் என்பவர் நல்ல பக்தர். அரவிந்தர் அன்னை அவர்களுக்காக கோடிக்கணக்கில் செலவழித்து ஒரு தனி centre நிறுவியுள்ளார். அங்கு ஒரு சிறிய பிள்ளையார் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்ய விரும்பினார். அதற்கு ஸ்ரீ ஸ்வாமிஜியை வரவேண்டும் என்று அழைத்தார். அந்த சமயத்தில் ஒரு பாகவத சப்தாஹம் நடத்தவும் ஆசைப்பட்டார்.

அம்பாசமுத்திரத்தில் ஒரு அழகான ஸ்ரீ கிருஷ்ணர் கோவில் உள்ளது. எப்பொழுது ஸ்ரீ ஸ்வாமிஜி அம்பாசமுத்திரம் வந்தாலும் அந்த ஸ்ரீ கிருஷ்ணர் கோவிலில்தான் பிரவசனம் செய்வார். முதன் முதலில் நாமத்வார் என்ற தனி இடம் எடுத்து நடத்துவதற்கு முன், அந்த ஸ்ரீ கிருஷ்ணர் கோவிலில் தான் மஹாமந்திரக் கீர்த்தனம் நடந்து வந்தது. இன்று அம்பாசமுத்திரம் முழுவதும் நாமசங்கீர்த்தனம் நடப்பதற்கு இந்த கிருஷ்ணரின் அருள்தான் காரணம். மார்ச் 13ஆம் தேதியிலிருந்து 19ஆம்

தேதிவரை ஸப்தஹம் நடந்தது. மூலபாராயணம் ஸ்ரீ குமார் கட்டியுள்ள centreல் நடந்தது. மாலை பிரவசனம் கல்லிடைக்குறிச்சி திலகர் பள்ளியின் திடலில் நடந்தது. திலகர் பள்ளியின் தாளாளர் (correspondent), முதன்மை ஆசிரியர், துணை முதன்மை ஆசிரியர் எல்லோரும் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் மிகுந்த அன்பைப் பொழிந்தனர். முதல் நாளில் சுமார் ஆயிரம் பேர் கதை கேட்க வந்திருந்தார்கள். போகப் போக பக்தர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே சென்றது. கடைசி நாள் மூவாயிரம் பக்தர்கள் வந்திருந்தனர். கடைசி நாள் மழை வந்து பிரவசனத்தை சீக்கிரம் முடிக்கும்படி ஆகிவிட்டது.

அம்பாசமுத்திரத்தில் சத்சங்கம் நடந்த சமயத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி ஒரு நாள் கன்னியாகுமரி சென்று நம்முடைய கேந்திராவைப் பார்த்து வந்தார். 16ஆம் தேதியன்று குமார் அவர்களுடைய இடத்தில் கணபதி ஹோமத்துடன் பிள்ளையார் பிரதிஷ்டை நடைபெற்றது. 17ஆம் தேதியன்று கல்லிடைக்குறிச்சியிலிருந்து ஒரு பக்தர் தங்கள் வீட்டில் பிக்ஷைக்கு வரவேண்டும் என்று அழைத்தார். ஸ்ரீ ஸ்வாமிஜியோ, 'நான் அன்ன பிக்ஷைக்கு வரவில்லை, நாமாவுக்கு வருகிறேன்', என்று சொல்லி அடுத்தநாள் கல்லிடைக்குறிச்சியில் நாமபிக்ஷை எடுத்தார். கல்லிடைக்குறிச்சி பக்தர்கள் அனைவரும் உற்சாகமாக ஸ்ரீ ஸ்வாமிஜியைச் சூழ்ந்து கொண்டு ஆசையுடன் நாமபிக்ஷை இட்டார்கள். பிறகு அங்கு சுருக்கமாக ஒரு பிரவசனம் செய்தார். அந்த ஊரில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மிவராஹ மூர்த்தியை தரிசனம் செய்தார். முத்துஸ்வாமி தீட்சிதர் இந்த லக்ஷ்மி வராஹப் பெருமாளை ஆபோகி ராகத்தில் பாடியுள்ளார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அந்த ஒரு வாரமும் அம்பாசமுத்திரம் திரு குமார் மற்றும் சகோதரி வள்ளி அவர்களின் இல்லத்தில் தங்கி இருந்தார்கள். அவர்களைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்லியே ஆகவேண்டும். சென்ற முறை ஸ்ரீ ஸ்வாமிஜி திரு குமார் வீட்டிற்குச் சென்றிருந்தபொழுது, ஒரு ஊஞ்சலில் அமர்ந்தார். அன்று முதல் அந்த ஊஞ்சலில் யாரும் உட்காருவதில்லை. ஸ்ரீ ஸ்வாமிஜி இரவு உறங்கச் சென்றபின் குமார் வீணை வாசிப்பார். காலை எழுப்புவதற்கு வீணை வாசிப்பார். ஸ்ரீ ஸ்வாமிஜி அமர்ந்து கொள்ளும் ஊஞ்சலை

அதிகாலையில் எழுந்து, ஒரு மணி நேரம் பூக்களால் அலங்கரிப்பார். ஸ்ரீ ஸ்வாமிஜி உபயோகப்படுத்திய அறையை வேறு யாரும் உபயோகப்படுத்த விடமாட்டார். ஸ்ரீ ஸ்வாமிஜி உபயோகப்படுத்திய பொருள்களை பத்திரமாகப் பாதுகாத்து வைத்துள்ளார். ஒவ்வொரு ஸ்வாதிக்கும் அந்த ஊஞ்சலுக்கே பூஜை செய்வார். ஏழைகளுக்கு மருத்துவ உதவி, உணவு என்று பல சேவைகளை செய்து வருகிறார். திருமணமே செய்து கொள்ளவில்லை. அவருடைய சகோதரி வள்ளியும் திருமணம் செய்துகொள்ளவில்லை. இருவரும் சேர்ந்து அந்த வீட்டில் இருக்கின்றனர்.

ஸ்ரீ ஸ்வாமிஜி ஒருநாள் நாமத்வார் சென்று வந்தார். அங்கு திரு.ரமணன் தம்பதிகள் பாத பூஜை செய்தனர். ஸ்ரீ ஷங்கர் மணி என்ற பக்தர், நமது நாமத்வார் சொந்த கட்டிடத்தில் இயங்குவதற்காக ஒரு இடம் அர்பணித்துள்ளார். சனி, ஞாயிறு இரண்டு நாட்களும் ராதா கல்யாணம் நடந்தது. அம்பை, கல்லிடைக்குறிச்சி பாகவதர்கள், குழந்தைகள் எல்லோரும் மிகவும் அழகாக திவ்யநாம பிரதக்ஷிணம் செய்தார்கள். குழந்தைகள் அனைவரும் தெய்வ வடிவங்களில் வேஷமிட்டுக் கொண்டிருந்தது மிகவும் அழகாக இருந்தது. ஸ்ரீ ஸ்வாமிஜி பிரவசனம் முடிந்து இரவு விருதுநகர் நாமத்வார் சென்று தங்கினார். மறுநாள் காலை 7 மணி அளவில் விருதுநகர் நாமத்வாரில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூட்டம். உடன் சென்றிருந்த ராமானுஜம் அவர்கள் விருதுநகர், அருப்புக்கோட்டை, தாயில்பட்டி, சிவகாசி ஆகிய ஊர்களுக்குச் சென்று பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தினார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் 20ஆம் தேதி, காரியாபட்டியைச் சேர்ந்த பக்தரான லக்ஷ்மிகாந்தன் என்பவரது இடத்தில், நாமத்வார் கட்டுவதற்கான பூமிபூஜைக்குச் சென்றார். விருதுநகரைச் சேர்ந்த காந்தீசன் என்ற பக்தர், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அமர்வதற்காக அந்த பூமியை முப்பது பக்தர்களைக் கொண்டு ஒரே இரவில் சமப்படுத்தி அழகான பந்தல், மேடை எல்லாம் போட்டிருந்தது வியக்கும் வகையில் இருந்தது. பூமிபூஜைக்குப் பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி சுருக்கமாக நாமத்வாரின் அவசியம், நோக்கம் இவைகளைப் பற்றிப் பேசினார். உலகம் முழுவதும் நாமம் பரவி நமக்கு ஸர்வமங்களத்தையும் அருளட்டும்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு

**உலகத்தில் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் உயிரின் மேல் ஆசை எல்லோருக்கும் இருக்கிறதே! இதற்கு காரணம் உலக இன்பங்கள் மேல் உள்ள ஆசை தானே?**

உலகத்தில் எல்லோரும் சுகத்தைக் காட்டிலும் துக்கத்தையே அதிகம் அனுபவிக்கின்றனர். ஆனால், தனது உயிரின்மேல் ஆசையும், வாழவேண்டும் என்ற எண்ணமும் எல்லோரிடையேயும் இருப்பதைக் காண்கின்றோம். உலகில் இன்பம் உள்ளது என்ற எண்ணம் அதற்குக் காரணமில்லை. தான் எப்படியும் உயிர் வாழவேண்டும் என்பது எல்லோரிடமும் உள்ளுணர்வாக (instinct) இருக்கிறது. உயிரை எப்படியாவது காத்துக் கொள்ளவேண்டும் என்ற அந்த உள்ளுணர்வுதான், எவ்வளவு கஷ்டப்பட்டாலும் மக்கள் தங்கள் உயிரை வெறுக்காமல் இருப்பதற்குக் காரணம்.

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

# ப்ரேமிக பவனம் உதயம்

திருமதி.ஜெயந்தி, வெள்ளிக்கிழமை தோறும் ஸத்ஸங்கத்து மஹிளா மண்டலியுடன் திவ்ய நாமம் செய்வார். தனக்குத் தெரிந்த பஜனை பாட்டுக்களையோ, பிரபந்தங்களையோ, அரிய உபன்யாச விஷயங்களையோ, அபங்கங்களையோ உடனுக்குடன் தனது மற்ற ஸத்ஸங்கத்துத் தோழிகளுக்குச் சொல்லிக் கொடுப்பார். அதனால், அவர்கள் எல்லோரும் ஜெயந்தி என்றாலே பிரியமாக இருப்பார்கள். அவரை ஒரு வழிகாட்டியாக வைத்துக் கொள்வார்கள். தன்னுடன் வேலை பார்த்தவர்களிடத்தும் தனக்குப் பழக்கப்பட்டவர்களிடத்தும் ஸ்வாமிஜியைப் பற்றிக் கூறி, அவரிடம் அழைத்து வந்து, எப்படியோ அவருடைய பக்தர்களாக்கி விடுவார். இவ்வாறு, குருநாதரை அடைந்து தனது வாழ்க்கையை ஸபலமாக்கிக் கொண்டு பிறவிப் பயனடைந்தார்.

2004ஆம் ஆண்டு துரதிர்ஷ்டவசமாக, திடீரென்று left breast இல் ஒரு lump இருப்பதாக தானே கண்டுபிடித்து, டாக்டரிடம் காண்பித்தார். உடனே அதை BIOPSYக்கு அனுப்ப வேண்டும் என்று கூற, அதை செய்து கொண்டார். BIOPSY செய்ததில், அது CANCER என்று தெரிய வந்தது. எல்லோருக்கும் இடி விழுந்தாற்போல் இருந்தது. எல்லாம் இருண்டு போனது, சோகத்தில் வீழ்த்தியது. ONCOLOGISTஐ பார்த்த போது, CHEMOTHERAPY, RADIATION எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார். ஸ்வாமிஜி டாக்டர் சொல்வது போல் செய்யச் சொன்னார். அதனால், உடனேயே OPERATION செய்து கட்டியை எடுத்துவிட்டு, பிறகு radiationஉம் chemotherapyயும் எடுத்துக் கொண்டார். CANCER TREATMENT என்பது, மிகவும் கடினமானதாக இருக்கும். ஆளை உலுக்கிவிடும். ஆனால், ஜெயந்தி அவர்கள், அதை எல்லாம் புலம்பாமல் தைரியமாக எடுத்துக் கொண்டார். தனக்கு ஏன் இப்படி ஒன்று வந்தது? தன்னை ஏன் இறைவன் இப்படி சோதிக்கிறார்? என்றெல்லாம் ஒரு முறை கூட அவர் சொன்னதில்லை. ஸ்ரீ ஸ்வாமிஜி, ஜெயந்தி அவர்கள் உபாதையால் கஷ்டப்படுவதைப் பார்த்து, மிகவும் மனம் வருந்துவார். இரண்டு வருட காலம் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் சிகிச்சை எடுத்துக் கொண்டார். அந்த சமயம் பொறுமையுடன், வலியைப் பொறுத்துக்கொண்டு, மகாமந்திர ஜபம் செய்து கொண்டும், கதா சிரவணம் செய்து கொண்டும், மனதை பகவானிடமே செலுத்தி, எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் இருந்தார். ஜானகிராமன் அவர்களும், சங்கீதா, பிரதீப், வித்யா எல்லோரும் மனதில் மிகவும் வேதனைப்பட்டனர். அந்த காலம் முழுவதும், ஸ்ரீ ஸ்வாமிஜி, ஏகாந்தத்தில் ஆலப்பாக்கம் மதுரமுரளி பவனத்தில் வசித்து வந்தார்.

இதற்கிடையே, ஜெயந்தி அவர்கள், ஒரு பாகவத சப்தாஹ உபன்யாசமும் செய்தார் என்றால், அது மிகப் பெரிய விஷயம். குருக்ருபையால் மட்டுமே அத்தகைய ஆத்மபலம் சித்தித்தது அவர்களுக்கு. எவ்வளவு சிகிச்சை செய்தும் குணம் தெரியவில்லை. மற்ற இடங்களுக்கும் பரவியது. இரண்டு வருடம் பல சரீர வேதனைகள் அனுபவித்துவிட்டு, 2006 ஜூன் 12ஆம் தேதி அன்று கோலோகத்தில் நித்ய ராஸத்தில் கிருஷ்ணனுடன் சேருவதற்கு, உடலை நீத்து கோலோக கோபியாக ஆனார். அச்சமயம், குருநாதர் வேறு இடத்தில் இருந்த போதிலும், சங்கீதாவிற்கு குருநாதர், அங்கு சூக்ஷ்மமாக வந்தது தெரிந்தது. குருநாதர் வரும்பொழுது, என்ன சுகந்தம் ஏற்படுமோ, அது நன்கு அவளுக்கு தெரிந்தது. இதைப் பிறகு குருநாதரும் ஆமோதித்தார்.

திருமதி ஜெயந்தி உடலைவிடும் சமயம், ஸ்ரீ ஸ்வாமிஜி கரூர் அருகில் காரில் சென்று கொண்டிருந்தார். சீனுவும் பாக்யநாதனும் உடன் சென்றுகொண்டிருந்தனர். மிக இருட்டான பாதை. அதே தருணத்தில், சீனு, “குருஜி! நான் இப்பொழுது ஒரு வெள்ளையான ஜோதி உங்களுக்குள் நுழைவதைக் கண்டேன்” என்று ஆச்சர்யத்துடன் கூறினார். ‘ஜெயந்தி என்னுள் வந்து கலந்துவிட்டாள்’ என்றார் ஸ்ரீ ஸ்வாமிஜி. மேலும் ஒரு சமயம் சொன்னார், “நான் எப்படி சொல்வேன்! சபரியைப் பற்றி ராமாயணத்தில் கூறி உள்ளதைப் போல் ‘திவ்யாபரண பூஷிதா’ என்று திவ்யமான ரூபத்துடன் மேல் லோகங்களுக்குச் செல்வதை, நான் கண் கூடாகப் பார்க்கிறேன்’ என்று ஜானகிராமன் அவர்களுக்கு, சமாதானம் கூறுகையில் சொன்னார்.

சில மாதங்கள் கழித்து, ஒருநாள் ஜெயந்தி தன்னிடம் வந்து, தான் மிகவும் ஆனந்தமாக கோலோகத்தில் இருப்பதை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும் என்று ஆசையாக உள்ளது என்று கூறியதை, ஒரு கடிதமாக எழுதி திரு ஜானகிராமனிடம் கொடுத்தார். ஓரிருநாள் கழித்து, அதை, ஸ்ரீ ஸ்வாமிஜி பிரேமிக பவனத்தில், உபந்யாசத்திற்கு நடுவில் கூறுகையில், ஜெயந்தி அவர்களின் படத்திலிருந்து, மாலை ‘தொப்’எனக் கீழே விழுந்தது. அதை அவர் ஆமோதித்ததை எல்லோரும் கண்டனர். இன்று வரை, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கட்டளையின் பேரில், ஜெயந்தி அவர்கள் க்ருஷ்ண சரணத்தை அடைந்த நாளை, ‘கோலோக விஜயோத்சவம்’ என்றுதான் அவர் குடும்பத்தினர், வைஷ்ணவர்களைக் கொண்டு, திவ்யப்ரபந்தங்கள் பாராயணம் செய்து கொண்டாடுகிறார்களே தவிர, ஒரு சாதாரண ஜீவனுக்குச் செய்வது போல் செய்வதில்லை.

Dr. Shriraam Mahadevan
MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes, Regn No. 62256
ENDOCRINE AND SPECIALITY CLINIC
New 27/1, Old 11/1, (Gr. Floor),
4th Cross Street, RK Nagar,
Mandaveli, Chennai -600028
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090, Mob: 9445880090
E-mail: mshriraam@gmaill.com, www.chennaiendocrine.com



# பக்தி சுகந்தம்

**ஸ்ரீ ராமானுஜம்**

ஏகாதசி திருநாள் மாலை நேரம். ப்ருந்தாவன கண்ணனின் மதுர விளையாட்டுக்களில் ஒன்றைப் பற்றி, மதுரபுரி ஆஸ்ரம பாகவத பவன மண்டபத்தில், ஆனந்தமாய் பாடியபடி இருந்தார் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள். தாகுர்ஜி தனது மண்டபத்தில் புஷ்ப மாலைகளுடன் வீற்றிருக்க, ஸ்ரீ ஸ்வாமிஜி தம் இருக்கையில் பாடியபடியே வந்து அமர்ந்தார்கள்.

அப்பொழுது அங்கு பத்துப் பன்னிரெண்டு அன்பர்கள்தான் இருந்தனர். என்ன நினைத்தாரோ தெரியவில்லை; ஸ்ரீஸ்வாமிஜி அவர்களைப் பார்த்து கண்ணாலேயே அருகில் வரும்படி சைகை காண்பித்தார்கள். கிடுகிடுவென முன் சென்றவர்களில் ஒரு பக்தரைப் பார்த்து, “உனக்கு ஏதாவது கேள்வி இருக்கிறதா? கேள்?” என்றார்கள்.

அந்த பக்தரின் எண்ண ஓட்டத்திற்குச் சரியாக ஸ்ரீ ஸ்வாமிஜியின் கேள்வி அமைந்தது போலும். அப்பக்தர் கொஞ்சமும் தாமதிக்காமல், “க்ருஷ்ண பக்தி ருசியை எப்படி வளர்த்துக் கொள்வது?” என்று கேட்டும் விட்டார். கேள்வியில் ஆர்வம் நன்றாக தொனித்தது.

ஸ்ரீ ஸ்வாமிஜி அதை எதிர்பார்த்தாற் போல, அடுத்த ஒரு மணி நேரத்திற்கு பக்தி ரசத்தைப் பற்றி பேசினார். பக்தி சுகம், பக்தி ப்ரயோஜனம் என்று இரண்டைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும். சுகம் என்றால் பக்தியினால் வரும் சுகம். ப்ரயோஜனம் என்றால் பக்தி செய்வதனால் கிடைக்கும் பலன் என்று ஆரம்பித்தவர் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

“நமது அன்றாட விஷயங்களைப் பார்ப்போம். நீங்கள் எல்லாம் தினம் குளிக்கிறீர்கள்தானே?...என சொல்லி மெல்ல சிரித்து விட்டு, குளிர்காலத்தில் நல்ல பெரிய குளியலறையில் வெதுவெதுப்பான வெந்நீர் நிறைய கிடைக்குமெனில், ஒருவனுக்கு அது இதமாக இருக்கும். அதனால் வெகு நேரம் நீராடவும் விரும்புவான். அது இயற்கைதான். உண்மையில் சொல்லப் போனால், மற்ற காரியங்கள் செய்ய அவசியம் வந்து குளியலை முடிக்க வேண்டி இருக்கையில், அடடா! இத்துடன் முடிகிறதே என கொஞ்சமும் வருந்தவும் செய்வான். ஆனால், அதே மனிதன் ஒரு சிறு குளியலறையில் குளிர்ந்த நீரில் நீராட வேண்டுமெனில், விரைவில் குளித்து விட்டு வந்து விடுவான். காரணம் குளியலின் நோக்கம் சரீரத்தில் இருந்து அழுக்கை நீக்குவதுதான். இரண்டிலும் அது நிகழ்ந்து விடுகிறது.

அப்படியே, ஆடை அணிவதை பார்ப்போம். உடலை மறைக்கத்தான் ஆடை; அதற்கான ஆடை போதும் எனினும், எத்தனை வித விதமான ஆடைகள் அணிகிறோம்! அதிலும் தினுசு தினுசாக அலங்காரம் செய்ய ஒப்பனைக்காரர்கள்; மேலும் எத்தனை நிறம், ரகம்...ஒரு முடிவே இல்லை...ஏன்? சிலர் ஆடை அணிவதே, வித்யாசமாக அணிந்தால் சந்தோஷமாக இருக்கிறது என அணிகிறார்களோ! என்று கூட நினைக்கத் தோன்றுகின்றது.

ஆகாரம் என்று பார்த்தாலும் உடலுக்கு சத்தான ஆகாரம் போதும்தான். ஆனால், நாம் அப்படியா இருக்கிறோம்? ருசியான உணவு பதார்த்தங்களை வித விதமாக சமைத்து, அதை நன்றாக உடை அணிந்து பரிமாற, நாம் சாப்பிட வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

அப்படியே, நாம் வாழும் வீடு. வாழ்வதற்கு போதுமானது என்று மட்டும் பார்க்காமல், பெரிதாக, கலை நுணுக்கமாக கட்டி இருக்க ஆசைப்படுகிறோம். மேலும், வீட்டினுள்ளும் விதவிதமாக அலங்காரங்கள் செய்து அழகு பார்க்க அல்லவா விரும்புகிறோம்! ஆனால், வேலை என்றாலோ பெரும்பாலானோர், “என்னை யாரும் பாராட்டுவது இல்லை. எனக்குச் சரியான மரியாதை இல்லை. நான்தான் வீட்டில் அதிகம் வேலை பார்க்க வேண்டி இருக்கிறது” என்றெல்லாம் சொல்லிச் சொல்லிப் புலம்புவதை பார்க்கிறோம். இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் மாற்றுக் கோணங்களில் பார்க்க முடிகிறது. ...தொடரும்

# நாம பரதே ஸாதனா நாஸ்தி

நாமத்தை விட உயர்ந்த
ஸாதனை இல்லை

**<u>ஹூஸ்டன் ராமஸ்வாமி</u>**

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**
**நான் புற்றுநோய் மருத்துவமனையில், வேதனையால் துடித்துக்கொண்டிருந்த எவ்வளவோ நோயாளிகளை என் நினைவிற்குக் கொண்டுவந்து, நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.**

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**
**சிறுநீரகம் செயலிழந்து, அதற்கான சிகிச்சையால் வேதனைப்படும் எண்ணற்ற நோயாளிகளை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.**

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்பொழுது,**
**autism போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுத் தவிக்கும் குழந்தைகளையும், அவர்களின் பெற்றோர்கள் படும் வேதனைகளையும் என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.**

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**
**சிலர் போகின்ற போக்கில் அவசரத்தில் அடிபட்டுப் பிணமாக வீதியில் கிடக்கும் காட்சிகளை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.**

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**
**பெற்றோர் இல்லாதக் குழந்தைகள் காப்பகத்தில் பார்த்த குழந்தைகளையும், மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் காப்பகத்தில் பார்த்த குழந்தைகளையும் என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.**

நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,

வயதானவர்களை நாய் போல் வீட்டில் வைத்திருக்கும் பலரின் சிந்தனைகளை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,

காலையிலிருந்து மாலைவரை வறட்டுத் தவளைபோலப் பேசிப் பேசி பொழுதைக் கழிக்கும் பலரை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,

அருமையான மனிதப் பிறவியில் தேவையில்லாத பிரச்சனைகளில் மாட்டிக்கொண்டு அதிலிருந்து வெளியே எப்படி வருவது என்று தெரியாமல் விழிக்கும் பலரை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,

விபத்தில் சிக்கி சுய நினைவிழந்து கோமாவில் பல வருடங்களாகப் படுத்துக் கொண்டிருக்கும் சிலரை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,

குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் துக்கங்களால் பாதிக்கப்பட்டு, வெளியில் வர முடியாமல் தவிக்கும் பலரை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,

ஒரு பிடி சோற்றுக்காகக் கடுமையாக உழைக்கும் பலரை சிந்தனை செய்கின்றேன். அப்படி சிந்தனை செய்தால், பக்தன் என்ற பெயரில் சோம்பேறியாக இருக்கின்ற நான் ஆத்ம துரோகி என்று எனக்குத் தோன்றுகின்றது. உணவு சாப்பிடவே கூசுகின்றது. அதனால் நாமம் சொன்னால்தான் சாப்பிடவேண்டும் என்று என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,

தனக்குத் தானே உயிரை மாய்த்துக்கொள்ளும் துர்பாக்கியவான்களை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**

மரணத்திற்குப் பிறகு அடைய வேண்டிய இருண்ட உலகங்களை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**

அடுத்த பிறவி நாயோ, பன்றியோ, மாடோ, யானையோ என்று பயந்து அதை என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**

என்னுடைய அருமையான வாழ்க்கையில் நாமம் சொல்லாமல் பொழுதுபோக்கு, அனாவசியமான விஷயங்கள், பேச்சு என்று செலவழித்த நேரங்களை நினைத்து வருந்தி, நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**

வாழ்க்கையில் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்தும், அடிபட்டும், இன்னமும் நமக்கு நல்லபுத்தியும் விரக்தியும் வரமாட்டேன் என்கிறதே என்று வெட்கப்பட்டு நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

**நாமம் சொல்லாமல் சோம்பேறியாக இருக்கும்போது,**

நான் வாழ்வில் எல்லோருக்கும் தெரிந்து செய்த பாவங்களையும், ரகசியத்தில் யாருக்கும் தெரியாமல் செய்த பாவங்களையும் என் நினைவிற்குக் கொண்டுவந்து நாமம் சொல்ல முயற்சிக்கின்றேன்.

Tune into our online radio Namadwaar's Webvoice between 6 am and 6pm everyday to be in satsang all through the day. Visit www.namadwaar.org for the link.

# நாமமே நமது குருவாகும்போது....

விக்னேஷ் சுந்தரராமன்

...இன்னும் சொல்லப் போனால், சமூகத்தில் சரளமாகப் பழகுவதும், நண்பர்களைச் சந்திப்பதும், அவர்களோடு நேரம் செலவழிப்பதும், பரிசளித்துக் கொள்வதும் பயனற்றவைகள் என்று உணர ஆரம்பிக்கிறோம். நாமம் சொல்லாமல் நாம் கழிக்கும் ஒவ்வொரு வினாடியும் விரயமாகிறதே என்ற எண்ணம் மேலோங்குகின்றது.

நமது மனமானது காமத்தினாலும், பேராசையினாலும் அலைக்கழிக்கப்படுவது நிறுத்தப்படுகிறது. அவற்றிலிருந்து நமக்கு விடுதலை வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆனால், பல்லாயிரக்கணக்கான பிறவிகளாய் நாம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் வாசனைகளை மீறி நாம் ஆசைகளிலிருந்து விடுபடுவது சுலபம் அல்ல. அவை, அவ்வப்போது தலை காட்டத்தான் செய்யும் என்று, ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், நாம் சொல்லும் நாமம் நிச்சயமாக இவ்விதமான வாசனைகளிலிருந்து நம்மை விடுவிக்கும் என்று நம்புகிறோம்.

இவை எல்லாவற்றையும் நன்கு உணரும் போதுதான் ஒரு விஷயம் நமக்குப் புரிகிறது. வெறும் இயந்திரத்தனமான நாம ஜபத்தினாலேயே நமது மனதில் இவ்வளவு மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது. இவை தானாக நிகழ்ந்ததா? அல்லது நமது விருப்பத்தினால் நாமே நம்மை மாற்றிக்கொண்டோமா? என்றால், நம்மால் மிகத் தீர்மானமாகச் சொல்ல முடியும், நாமம் நமது உள்ளத்தினுள் நுழைந்து அதை மேன்மையாக்கி இவ்வளவு

மாற்றங்களை நம்மை அறியாமலேயே நமக்குள் செய்திருக்கிறது என்று. நாமம் நமது நம்பிக்கையை அதிகரித்திருக்கிறது. பிறப்பு இறப்பு முதலானவற்றின் மீதுள்ள நமது பயத்தைப் போக்கியிருக்கிறது. மறுபிறவியில் நம்பிக்கை ஏற்படுத்தியிருக்கின்றது. நேர விரயத்தின்மீது பயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. நமது அறியாமையும், இந்த உலகில் நாம் ஒரு சிறிய ஜீவன் என்றும், நமது இருப்பில் உள்ள நிலையாமையும் நமக்குப் புலப்படுகின்றது. இது எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நல்ல மாற்றத்தின் காரணம் நாமம்தான் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. கடவுளைக் காணும் ஆசையை நம்முள் விதைத்திருக்கின்றது. கடவுளை அடையும் பாதையில் நாம் பல படிகளைக் கடந்து வரவேண்டியிருக்க, நாமம் அதை மிகவும் சுலபமாக, நம்மை மிகவும் சிரமப்படுத்தாமல் இன்னும் சொல்லப்போனால், நமக்கு விருப்பம் இருக்கிறதா இல்லையா என்று நமக்கேகூடத் தெரியாத போதும், நமக்கு கடவுளைக் காட்ட சித்தமாயிருக்கின்றது. எதை மிகக் கடினமான சாதனைகளின் மூலமும், வேதத்தின் நுண்ணிய அறிவினாலும் மட்டுமே அடைய முடியும் என்று நாம் நம்பியிருந்தோமோ, அதை, நமக்கு மிகச் சுலபமாக வெறும் இயந்திரத்தனமான நாம ஜபம் சாதித்துக் கொடுத்து விடுகிறது.

ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆதிசங்கரரின் தத்வ போதத்திலிருந்து மிக அழகாக ஒரு மேற்கோள் காட்டுவார், "நித்ய-அநித்ய-வஸ்து-விவேக" என்று. இதன் பொருள் என்னவெனில், மறையும் மற்றும் மறையாமல் இருக்கும் பொருளையும் அல்லது உண்மையையும் மற்றும் மாயையையும் வேறுபடுத்தி அறியும் திறன் என்பதாகும். நம் கண்ணுக்குத் தெரியும் பொருள்களை நம்மால் வேறுபடுத்தி அறிய இயலும். ஆனால், கண்ணுக்குத் தெரியாமல் மறை பொருளாக, உருவமற்று விளங்கும் பிரம்மத்தை உணர நமக்கு குருவின் உதவி இன்றியமையாதது. குருவின் கருணையை அடைவதற்கு மிகச் சிறந்த மற்றும் சுலபமான வழி யாதெனில், அவரது வார்த்தைகளில் நம்பிக்கை கொள்வதும், கேள்வியின்றி அவர்

சொற்படி நடப்பதுமே ஆகும். சீடன், குருவின் வார்த்தைகளை நம்புவானானால், குருவும் அவனை நம்புகிறார். அவன் மீதான குருவின் நம்பிக்கையானது அவன் ஆன்மீகப்பாதையில் முன்னேற வழி வகுக்கிறது. அவரது கருணை சீடனை அவரது அன்பான அரவணைப்பிற்குள்ளாகவே எப்போதும் வைத்துக்கொள்கிறது.

கடவுளை உணர்வதென்பது ஒருநாள் நிகழ்வோ அல்லது கேட்டு வாங்கும் விஷயமோ அல்ல என்பதை நாம் உணரும்போது, நாம் சொல்லும் நாமம் நமக்குள் தேடலை அதிகரிக்கிறது.

ஆரம்பகாலத்தில் ஒரு உபதேசம் வேண்டி குருவை அண்டிய நாம், அவர் நமக்கு உபதேசித்த இறைநாமமே நமக்குக் குருவாக இருந்து நம்மை வழிகாட்டி நல்வழிப்படுத்துவதை உணர்கிறோம்.

# ஸனாதன புதிர் – 95

## ஆத்ரேயன்

### கேள்விகள்

1. எந்த இடத்தில் ஒரு ராத்திரி இருந்தால் கணபதி பதத்தை அடையலாம்?
2. அர்ஜுனன்/கர்ணன் கொடிகளுக்கு என்ன உபமானம் சொல்லப்பட்டு இருக்கிறது?
3. மதுரா ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த இடம். இதன் மற்றொரு பெயர் என்ன?
4. ப்ருஹஸ்பதியின் மனைவியின் பெயர் என்ன? இவருக்கு எத்தனை குழந்தைகள்?
5. ம்ருதசஞ்ஜீவினி வித்யா தெரிந்தவர் யார்? யாரிடம் இருந்து கற்றார்?
6. சோமன் எட்டு வசுக்களில் ஒருவர். அவருடைய மனைவி/பிள்ளை பெயர் என்ன?
7. அபிமன்யுவின் பெற்றோர் யார்? இவர் யாருடைய அம்சம்? இவர் எத்தனை ஆண்டுகள் உயிரோடு இருந்தார்?
8. ராஹுவின் பெற்றோர் யார்? இவரது எதிரிகள் யார்?
9. சஞ்ஜயன் திருதராஷ்டிரனிடம் யாரைப் பற்றி விசேஷமாக கூறுகிறார்? அது எங்கே காணப்படுகிறது?
10. சவிதா, விவஸ்வான், ரவி, மஹ்யன் என்று அழைக்கப்படுபவர் யார்? இவரின் பெற்றோர் யார்?

# ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஜெயந்தியும் ஹோலி உற்சவமும்


ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஜெயந்தியும் ஹோலியும் ஒரே நாள். ஹோலிக்கு நான்கு நாட்கள் முன்பாகவே, ப்ரேமிக பவனத்தில், நமது ஸத்சங்கக் குழந்தையான குமாரி சாருலதா பிரதீப் தலைமையில், குழந்தைகள் மட்டும் கலந்துகொண்ட ஹோலி தினமும் கொண்டாடப்பட்டது. மார்ச் 12ம் தேதியன்று, ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் திரு. வ்ரஜதாஸ் அவர்கள் ப்ருந்தாவனவிஹாரி ஸந்நிதியில் வ்ரஜவாஸிகளுடன் ஹோலி கொண்டாடினார்கள்.

கோவிந்தபுரத்திலுள்ள நமது சைதன்ய குடீரத்தில் ஸ்ரீ விஷ்ணுராத பாகவதர் தலைமையில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பல பாகவதோத்தமர்கள் கலந்து கொண்டு ஜகந்நாதர் ஸ்நிதியில் பல வாத்யகோஷ்டிகளுடன் மஹாமந்திர கீர்த்தனம் செய்தார்கள். மாலை வீதி பஜனையுடன் ஹோலி உற்சவமும் கொண்டாடப்பட்டது. நம்முடைய எல்லா நாமத்வார்களிலும் ஹோலி உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.





ஹோலி பண்டிகை, ப்ருந்தாவனம்





ஸ்ரீ மஹாப்ரபு ஜெயந்தி, சைதன்ய குடீரம்








ஸ்ரீமத் பாகவதம் சப்தாஹம், அம்பாசமுத்திரம் -
ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபந்யாசம், BG திலக் வித்யாலயா, 13-19 March
இடது பக்கம்: நாம பிக்ஷை, கல்லிடைக்குறிச்சி, 17 March








காரியாப்பட்டி நாமத்வாரின் பூமி பூஜை - ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபந்யாசம், 20 March






விருதுநகர் நாமத்வார், 19 March



தாராபுரம், 26 March





**ஸ்ரீ வானரராஜசிம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம், காங்கேயம், 26 March**









ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளிச்செயலான கலிதர்ம உந்தியார் தொடர் உபந்யாசம், ஸ்ரீ பாக்யநாதன்ஜி, குடியாத்தம்; பூர்த்தி தினத்தன்று ஸ்ரீ ஸ்வாமிஜியின் திரு உருவ புறப்பாடு, 13-16 March









**ஸ்ரீ ராமானுஜம்ஜியின் உபந்யாசம் மற்றும் கூட்டு பிரார்த்தனை,**
**அருப்புக்கோட்டை - விருதுநகர் நாமத்வார் - சிவகாசி நாமத்வார்**
**19 March**

## ஸ்ரீ பூர்ணிமாஜியின் சிங்கப்பூர் சத்சங்கங்கள்: தசமஸ்கந்தம் பாராயணம், ராதா கல்யாணம், ஸ்ரீ ராமானுஜர் வைபவம் உபந்யாசம், கோப குடீரம் ஆண்டு விழா, 11-20 March













**Graduation Day, Prasiddhi School, Bengaluru, 10 March**



**பம்மல் ஸ்ரீ பாலாஜி அவர்களின் உபந்யாசம், சேக்காடு**



**ஸ்ரீ முரளி அவர்களின் மஹாமந்த்ர கூட்டு பிரார்த்தனை,**
**RT30 விவேகானந்தா வித்யாலயா, அகரமேல்**





**ஹூஸ்டன் ஸ்ரீ ராமஸ்வாமி அவர்களின் ஸ்ரீமத் பாகவத சப்தாஹம், அரக்கோணம் (6-12 March) மற்றும் செம்பாக்கம் (19-25 March)**




**கன்யா சகோதரிகளின் கிருஷ்ண லீலை உபந்யாசம், கடலூர், 13-19 March**



**குமாரி காயத்ரி — குமாரி ப்ரியங்கா, ஸ்ரீ கிருஷ்ண லீலாம்ருதம் உபந்யாசம், கீர்த்தனாவளி மண்டபம், காஞ்சிபுரம், 13-19 March**




**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# சினம் தவிர்

வாகனங்களுக்கு மிக முக்கியமான உதிரிபாகம் ஒன்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அது. எப்பொழுதும் பல்வேறு இயந்திரங்களின் கனகச்சித இயக்கங்களுக்கு மத்தியில் தொழிலாளர்கள் கண்ணும் கருத்துமாக வேலை செய்வர். அங்கு கணேஷ் எனும் ஒரு அருமையான பொறியாளர் இருந்தார். அவர் மேற்பார்வையில்தான் அனைத்து பொருள்களின் இறுதி வடிவும் அளவும் உற்பத்திக்கான வரைபடங்களில் இடம்பெறும்.

அத்தொழிற்சாலைக்கு ஒரு பெரிய ஆர்டர் ஒன்று வந்தது. அது மிக சவாலானது. கணேஷ்தான் அதையும் வடிவமைத்துப் பொறுப்பாக உற்பத்திக்குக் கொண்டு வந்தார். எதிர்பாரா விதமாக, பல உதிரிபாகங்கள் உற்பத்தி செய்ததன் பின்னால், அதை பரிசோதித்து பார்க்கையில் அது தவறாக வடிவமைக்கப்பட்டு இருந்தது தெரிய வந்தது. அவ்வளவுதான்! எல்லோரும் பயந்து போய் விட்டனர். ஏனெனில், அதனால் பல கோடி ரூபாய் ஆலைக்கு நஷ்டம் உறுதி ஆனது. என்ன செய்வது?

வடிவமைத்து உற்பத்திக்கான வழிமுறைகளை தந்தது கணேஷ்தான். அவர் செய்த சிறு தவறுதான் தவறான உற்பத்திக்குக் காரணம் எனத் தெளிவாக தெரிய வந்தது. இது தெரிந்தவுடன், அந்நிறுவனத்தின் முதலாளி கணேஷை கூப்பிடுவதாக மேலாளர் வந்து சொன்னார். கணேஷ் மிகுந்த கவலையுடன் முதலாளியின் அறைக்கு மேலாளருடன் சென்றார்.

கணேஷுக்கு வேலை போய் விடும் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர். அறைக்குள் மேலாளரும் கணேஷும் நுழைந்த பின்னும், அவர்கள் வந்ததை கவனியாமலே முதலாளி ஏதோ எழுதி கொண்டிருந்தார். முதலாளி மிகுந்த கோபத்தில் இருக்கிறார் என்பதால் கணேஷும் மேலாளரும் ஏதும் பேசாமல் பவ்யமாக நின்று கொண்டிருந்தனர்.

பல குறிப்புகள் எழுதியபின், முதலாளி கணேஷைப் பார்த்து எந்தவித கோப உணர்ச்சியையும் பெரிதாகக் காட்டாமல், பொறுமையாக விவரங்களை கேட்டதோடு மட்டுமல்லாமல், மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதற்கும் ஆணை இட்டார். கூட இருந்த மேலாளர் பொறுமை இழந்து, அய்யா! இவரால் நாம் மிகுந்த நஷ்டம் அடைந்திருக்கிறோம்; நீங்கள்

இவரை ஒன்றும் சொல்லாமல் இருக்கிறீர்களே. இவரை வேலையை விட்டு அனுப்ப வேண்டும் என்று ஆவேசமாக பேசினார்.

அப்பொழுது, தான் குறிப்பெடுத்த ஏட்டை எடுத்து அம்மேலாளர் முன் போட்ட முதலாளி, "நீங்கள் சொல்வதை நானும் அறிவேன். நானும் அந்த எண்ணத்தில்தான் இருந்தேன். ஆனால், இந்த கணேஷிடம் என்னென்ன நல்ல அம்சங்கள் உள்ளன என்று எழுதிப் பார்த்து கொண்டேன். நீங்களும் இதை பாருங்கள். எழுதியபின்தான் எனக்கு ஒன்று புரிந்தது. நம் நிறுவனம் பல ஆர்டர்களை மிக கச்சிதமாக செய்து முன்னுக்கு வர இவரது பொறியியல் நுண்ணறிவு ஒரு முக்கிய காரணம். மேலும், இவர் அனைத்து ஊழியர்களிடமும் நன்றாகப் பழகி தொழில்நுட்பங்களை விளக்கிப் பகிர்ந்து கொள்கிறார். இது உற்பத்தி செலவையும் நேரத்தையும் குறைப்பதோடு மட்டுமல்லாமல் எளிதாக்கவும் செய்கிறது. இவர் அனாவசியமாக ஓய்வு எடுக்காமல் உபயோகமாக எதையாவது செய்து கொண்டே இருப்பார்; நானே அதைப் பார்த்திருக்கிறேன். எனக்கே இவர் மீது நேற்று வரை மிகுந்த மதிப்பு இருந்தது. அப்படியே பிறரும் இருக்கின்றனர். இப்படி எழுதி கொண்டே போக போக எனக்கு ஒன்று தெரிந்தது. இந்தத் தவறு இவர் அறியாமல் ஏதோ ஒருமுறை இழைத்து விட்டார். எப்பொழுதுமே செய்பவரும் அல்ல. மேலும் இப்படிப்பட்ட பெரிய ஆர்டரின் உற்பத்தியில் ஏற்பட்ட தவறை அவர் மேலேயே முழுக்க சொல்வதும் தப்பு" என்று சொன்னார். மேலும் மேலாளரை பார்த்து கணேஷை மறுபடி அதே பொறுப்பில் போடுங்கள். இவர் முன்பை விட நன்றாக செய்வார் என்று நம்பிக்கையுடன் சொல்லி அனுப்பினார்.

அவர்கள் முதலாளியின் பெருந்தன்மைக்கு ஆச்சரியப்பட்டு நன்றி சொல்லி போனார்கள். அந்த முதலாளியோ மிக நல்ல அனுபவஸ்தர். "யார் மேல் நமக்கு கோபம் வருகிறதோ அவரைப் பற்றி நல்ல விஷயங்களை கொஞ்ச நேரம் சிந்தித்து விட்டு, அந்த நபரை நாம் சந்திக்க சென்றோமானால், நமது சிந்தனை முற்றிலும் மாறுபட்ட கண்ணோட்டத்துடன் இருப்பதை பார்க்க முடியும். அது நாம் அவசரப்பட்டு எதுவும் தவறாக செய்து விடாமல் தடுப்பதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் அனாவசியமான தர்மசங்கடங்களையும் தவிர்க்கும்" என்பதை தம் அனுபவத்தின் மூலமாக நன்கு புரிந்து கொண்டிருந்தவர் அம்முதலாளி. அந்நிறுவனம் மேலும்மேலும் வெற்றிச் சிகரம் தொட்டு வருகிறது என்பதற்கு இதுவும் ஓர் முக்கிய காரணம் என்பதை சொல்லவும் வேண்டுமோ?

மாதம் ஒரு
சம்ஸ்க்ருத வார்த்தை

# अग्र

**ஸ்ரீ விஷ்ணுப்ரியா**

# அக்ர

'அக்ர' என்றால் முதலில், முன்பு, முனை, ஆரம்பத்தில் என்றெல்லாம் அர்த்தம். ஒவ்வொரு அர்த்தத்திலும் பல வார்த்தைகள் ஸம்ஸ்க்ருதத்தில் உள்ளன. ஸ்ரீமத் பாகவதத்தில் 'சதுர்ஸ்லோகி பாகவதம்' என்று ஒன்று உண்டு. இரண்டாவது ஸ்கந்தத்தில் பகவான் ப்ரம்மாவிற்கு நான்கே ச்லோகங்களில் பாகவதத்தை உபதேசம் செய்கிறார். அதில் 'அஹமேவாஸம் ஏவ அக்ரே' – முதன் முதலில் (அக்ரே) ஸ்ருஷ்டிக்கும் முன்பு நான் மட்டுமே இருந்தேன் என்கிறார்.

நாராயணீயத்திலும், கடைசி தசகத்தில், பட்டத்ரீக்கு குருவாயூரப்பன் அத்புதமான ஒரு தரிசனத்தை அளிக்கின்றானல்லவா? அதை ஆனந்தமாக வர்ணிக்கிறார் 'ஆஹா! என் எதிரில் பேரொளியை காண்கிறேனே. அத்தகைய அழகுடன் கண்ணன் தோன்றுகிறானே!' என்கிறார்.

'அக்ரே பஷ்யாமி தேஜோ நிபிடதரகலாயாவனீ லோபநீயம்' என்று அந்த தஶகம் ஆரம்பிக்கின்றது. 'அக்ரே' (என் எதிரில்) பஷ்யாமி – காண்கிறேன் என்று தனது சாக்ஷாத்காரத்தை கூறுகிறார்.

'அக்ரபுக்' என்றால் பந்தியில் எல்லோருக்கும் முன்பு முதலில் சாப்பிடுபவர் என்று பொருள். அதனால்தான் துர்வாஸருக்கு 'அயுதாக்ரபுக்' என்று பெயராம். ஏனெனில் அவர் தனது பதினாயிரம் சிஷ்யர்களோடு எல்லா இடத்திற்கும் செல்வார். அங்கெல்லாம் எல்லா

சிஷ்யர்களோடும் அமர்ந்து, அவர்களோடு போஜனம் செய்வார். அப்போது அவர்களுள் முதன்மையாக இருந்து முதலில் உண்பார். அதனால்தான் பாகவதத்தில் அர்ஜுன விலாபம் வரும் கட்டத்தில், "பதினாயிரம் சிஷ்யர்களோடு அமர்ந்து முதல்வராக போஜனம் செய்யும் துர்வாஸ முனிவரை நமது எதிரி துர்யோதனன் காட்டில் வாழும் நம்மிடம் அனுப்பிய போது, அவருடைய சாபத்திலிருந்து நம்மை காப்பாற்றினானே கண்ணன்! அந்த கண்ணன் இப்போது நம்மை விட்டு வைகுண்டம் சென்று விட்டான்'' என்று புலம்புகின்றான்.

'அக்ர' என்றால் 'நுனி' என்று ஒரு அர்த்தம் என்று கூறினோம் அல்லவா? 'அங்குல்யக்ரம்' என்றால் விரலின் நுனி பாகம், அதாவது 'நகம்' என்று அர்த்தம். ஸ்ரீமத் ராமாயணத்தில், விபீஷணன் ராமரிடம் ஷரணாகதி செய்த போது, ராமருக்கு பலர் ஆலோசனை கூறினார்கள். ஸுக்ரீவன் ராமரிடம் – 'இவன் நம்பத் தகுந்தவனல்ல. ராவணன் நம்மை கொல்வதற்கு சூழ்ச்சி செய்து இவனை அனுப்பியிருக்கிறான்' என்றெல்லாம் கூறியபோது, ராமர் ஸுக்ரீவனிடம் கூறிய பதில் 'இவன் நல்லவனாக இருந்தாலும் சரி, கெட்டவனாக இருந்தாலும் சரி, எனக்கு ஒரு கெடுதலும் செய்ய முடியாது. அஸுரனோ, ராக்ஷஸனோ, யக்ஷனோ, யாராக இருந்தாலும், நான் விரும்பினால் எனது விரல் நுனியில் இருக்கும் நகத்தாலேயே (அங்குல்யக்ரேண) அவர்களை கொல்ல முடியும். யாருடைய பலமும் எனக்கு தேவையில்லை. ஆனால், என்னை சரணாகதி செய்தவனை, எதிரியாக இருந்தாலும், கைவிட மாட்டேன். ஏற்றுக் கொள்வேன்' என்றார் ஸ்ரீ ராமர்.

'அக்ரகண்ய' என்ற சொல் ப்ரஸித்தமானது தான். எந்த ஒரு ஸமூஹத்திலும் முதல்வராக கருதப்படுபவரை அக்ரகண்யர் என்று சொல்வதுண்டு. நமது குருநாதர் 'க்ருஷ்ண பக்தி ஸாம்ராஜ்யே...' என்ற கீர்த்தனத்தில் 'விதி பவ குடும்பா அக்ரகண்யா:' என்று பாடுகிறார். க்ருஷ்ண பக்தி ஸாம்ராஜ்யத்தில் விதி, அதாவது ப்ரம்மா, மற்றும் பவ, அதாவது பரமசிவன் இவர்களின் குடும்பம் முதன் முதலில் என்னைப் பாடுபவர்களாக இருக்கின்றனர் என்கிறார்.

'அக்ரஜ' என்றால் 'அண்ணா'. அதாவது 'அக்ரே ஜாத:' – முதலில் பிறந்தவர். பகவானுக்கு ஸஹஸ்ரநாமத்தில் 'அக்ரஜ:' என்று ஒரு பெயர் உள்ளது. 'அக்ரணீ' என்றும் ஸஹஸ்ரநாமத்தில் ஒரு பெயர் உண்டு. 'அக்ரணீ' என்றால் நம்மை முன் இருந்து அழைத்து செல்பவர் என்று அர்த்தம்.

'அக்ரேஸர' என்றால் ச்ரேஷ்டமான, சிறந்த என்று பொருள். 'ரஸிகாக்ரேஸர ப்ரேமிக விநுதம் ஸ்மரரே ப்ருந்தாவனம்' என்றால் ரஸிகர்களுக்குள் ச்ரேஷ்டமான ப்ரேமிகன் போற்றும் ப்ருந்தாவனத்தை நினை என்று அர்த்தம்.

'ஏகாக்ர' சித்தம் இருந்தால் தான் பகவானை த்யானம் செய்ய முடியும் என்று நமது குருநாதர் அடிக்கடி கூறுவார். 'ஏகாக்ரம்' என்றால் ஒரே நோக்கம், அதாவது ஒருமுகப்பட்டு மனது கூர்மையாக (அக்ர – என்றால் முனை) இருப்பது. எதை செய்தாலும் 'ஏகாக்ர' மனதுடன் செய்தால்தான் அது நிறைவேறும். இவ்வாறு 'அக்ர' என்ற சொல்லிற்கு அனேக கோணங்களில் அர்த்தத்தை பார்த்தோம்.

## சோப்பு

பண்டைய இந்தியாவில் துணிகளைத் துவைக்க ஒருசில தாவரங்கள் மற்றும் பழ விதைகளைப் போன்றதான சிகக்காய், கடுக்காய் ஆகியவற்றை உபயோகப்படுத்தினர். மேலும், வில்வப் பழம் (Sriphala) மற்றும் கடுகு (Sarsapa) ஆகியனவற்றை ஒரு சில துணிகளைத் தூய்மை செய்யப் பயன்படுத்தினர். கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதிகாலத்தில் குருநானக்கின் படைப்புகளில் சோப்பின் பயன்பாட்டிற்கான குறிப்புகள் உள்ளன. கி.பி 2 மற்றும் 3 ஆம் நூற்றாண்டில் பெனகா (phenaka) என்ற சோப்புப் போன்ற பொருளின் குறிப்பு மனுஸ்மிருதி மற்றும் யக்ஞயவல்கியஸ்மிருதி ஆகியவற்றில் காணக்கிடைக்கின்றன. கி.பி.18வது நூற்றாண்டில் இந்தியர்கள் தற்போது நாம் பயன்படுத்தும் வகையான சோப்பினை தயாரிக்கத் தொடங்கினர். ஆமணக்கு எண்ணெய், இலுப்பைப் பூ விதை மற்றும் கால்சியம் கார்போனேட் ஆகியன குஜராத்தில் சோப்புத் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டன. இவை துவைப்பதற்கு பயன்படுத்தப் பட்டாலும் குளியலுக்கான மிருதுவான சோப்புகள் பிற்காலங்களில் தயாரிக்கத் தொடங்கினர்.

## சாயமேற்றுதல்

மஞ்சள், மாஞ்சிட்டி, செந்தூரகம் ஆகியன சாயமேற்றலில் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்ட பொருட்களாகும். போர்னியோ (orpiment), அரக்குக்கொசு (lac), பூச்சிகளில் இருந்துப் பெறப்படும் சாயம் (cochineal), உலர்ந்த பெண் பூச்சியினத்திலிருந்து பெறப்படும்

ஸ்ரீ பாலாஜி ராமசந்திரன்

பகுதி 3

# இரசாயன மற்றும் வேதியியல் துறைகளில் பண்டைய இந்தியா



# பாரம்பரிய பொக்கிஷங்கள்

செஞ்சாயப் பொருள் (kermes) ஆகியன சாயமேற்றலில் உபயோகிக்கப்பட்ட பிற பொருட்களாகும். கி.மு 1000வது ஆண்டுகளின் அதர்வன வேத வரிகளில் சாயமேற்றலில் பயன்படும் பொருட்களைப் பற்றிய குறிப்பு காணக்கிடைக்கின்றது. சாயங்களானவை, கனிமப் (inorganic) பொருட்களை தண்ணீரில் ஊற வைத்து, அதனை மேலும் மேலும் கரைத்து, சீரமைப்பதின் வாயிலாகப் பெறப்படுகின்றன. அந்தக் கரைசலை பானையில் படறவைத்து ஆவியேற்றலின் மூலமாக உலர் சாயம் பெறப்படுகின்றது. அழகு சாதனப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் வரஹமிஹிராவின் சமஸ்க்ருத நூலான ப்ரஹத் சம்ஹிதாவில், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்களைப் பற்றிய குறிப்பு பல காணக்கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் இறை வழிபாட்டிற்காகவும், பிறர் கவனத்தைக் கவர்வதற்காகவும், விற்பனைக்காகவும் தயாரிக்கப்பட்டன. போவரின் ‘நவனிதக’ கையெழுத்துப் பிரதிகளில் (Bower manuscript Navanitaka) தலைமுடி சாயத்தின் செய்முறை மற்றும் மூலப் பொருட்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. அவுரி செடி (Indigo), இரும்புக் கனிமப்பொடி (Minerals like iron powder), அரிசிக் கஞ்சியிலிருந்து எடுக்கப்பட்ட அமிலம் போன்றவை அந்தத் தலைமுடி சாயத்தின் மூலப் பொருட்களாகும். கந்தயுக்தியில் (Gandhayukti) வாசனைத் திரவியங்களுக்கான செய்முறை மற்றும் மூலப்பொருட்களுக்கான குறிப்பு உள்ளது.

## மை (INK)

பாகிஸ்தானின் பஞ்சாபிலுள்ள டாக்ஸிலாவின் அகழ்வாராய்ச்சியின் போது, ‘மை’ பானையானது கண்டெடுக்கப் பட்டதிலிருந்து, இந்தியாவில் ‘மை’யின் உபயோகமானது கி.மு நான்காம் நூற்றாண்டிலிருந்து பயன்பாட்டில் உள்ளது என்று தெரியவருகின்றது. அஜந்தாவின் கல்வெட்டுகள் சிலவற்றில், வண்ண மையானது உபயோகிக்கப்பட்டுள்ளது. அது சுண்ணாம்பு, சிவப்பு ஈயம், மினியம் ஆகியன கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தியர்கள், சீனர்கள் மற்றும் ஜப்பானியர்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ‘மை’யினை பலகாலம் உபயோகித்தனர். ‘மை’ தயாரிப்பு செய்முறையானது ரசரத்னகரா (Rasaratnakara)வில் உள்ளது.

இவையனைத்தும், இரசாயன மற்றும் வேதியியல் துறைகளில் பண்டைய இந்தியர்கள் உலகின் முன்னோடிகளாக இருந்துள்ளனர் என்பதற்குச் சான்றாகும்.

# படித்ததில் பிடித்தது

(செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு)

---

## Seminar on Hindu heritage in Pakistan

Times of India
Dec 30 2016

அரசு சாரா இளைஞர்கள் அமைப்பும், பஞ்சாப் புத்தக நிலையமும் இணைந்து ஒரு சனிக்கிழமையன்று ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில், பாகிஸ்தானின் சாக்வல் மாவட்டத்தில் அமைந்துள்ள கடஸ்ராஜ் கோவில்களைப்பற்றிய விவாதம் எழுந்தது. சமீபத்தில் அங்கு சென்று வந்திருந்த இளைஞர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான ப்ரமோத் ஷர்மா, அங்குள்ள கோவில்களின் சிறப்பையும், அதில் வழிபாடு செய்துவரும் இந்துக்களைப்பற்றியும், அக்கோவில்களில் புழக்கத்திலிருக்கும் நமது பண்பாட்டைப்பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். ஹரியானா, ஸ்வர்ண ஜெயந்தி கொண்டாட்டங்களின் இயக்குனரான, S.K. சேதியா, பிரதான விருந்தினராகப் பங்கேற்றார்.

திரு ஷர்மா கூரியதாவது, "கடஸ்ராஜ் கோவில்களில் சிவ வழிபாடு செய்யப்படுகிறது. மகாபாரதக் காலங்களில் இருந்தே இந்தக் கோவில் இருந்துவந்திருக்கிறது. பாண்டவர்கள் தமது அக்ஞாத வாசத்தின் ஒரு பகுதியை இங்கு கழித்தனர். மேலும், ஸ்ரீ கிருஷ்ணனே இந்தக் கோவிலிற்கு அடிக்கல் நாட்டி இருக்கிறார், வழிபடப்படும் லிங்கமும், பகவான் கிருஷ்ணனின் திருக்கரங்களால் உருவாக்கப்பட்டதே", என்றும் அவர் தெரிவித்தார்.

# புராநவா



**இந்த கோவில் எங்கு உள்ளது?**

**<u>சென்ற மாத புராநவா பதில்</u> — த்ரிவிக்ரம அவதாரம்**

**சனாதனபுதிர் 95 பதில்கள்**

1. ஸ்தாணு ஸ்தானம் (வனபர்வா)
2. ராகு/கேது என்று சொல்லப்பட்டு இருக்கிறது (கர்ணபர்வா)
3. சூரசேன்பூர்
4. சந்திரமாரி என்ற தாரா. அக்னி ஸ்வரூபமான 6 புதல்வர்கள் - சம்யு என்பவர் பெரியவர். இவர்களைத் தவிர கசன் என்ற பிள்ளை. மற்றும் ஒரு புதல்வி.
5. கசன். சுக்ராசார்யாரிடமிருந்து
6. மனைவி - மனோஹரா - பிள்ளை - வர்சா
7. அர்ஜுனன் - சுபத்ரா; சோமனின் மகள் வர்சாவின் அம்சம்; 16 வயது வரை இருந்தார்.
8. கச்யபர் - ஸிம்ஹிகா; எதிரிகள் சூர்யன் - சந்திரன்
9. ராஹுவைப் பற்றி; பீஷ்மபர்வாவில்
10. சூர்யன்; கச்யபர் - அதிதி

# வெளியீடுகள்




பாகவத தர்ம சாரம்
ஸ்ரீ ஸ்வாமிஜியின்
உபன்யாசங்களிலிருந்து...
புத்தகத்தின் விலை
Rs 100/-




A DIVINE PRESENT FOR
THE PRESENT ERA
ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள்அருளிய
கலிதர்ம உந்தியாரின்
ஆங்கில புத்தகம், Rs 70/-




ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய கலிதர்ம உந்தியாரின்,
ஸ்ரீ பாக்கியநாதன்ஜியின் 9 நாட்கள் சென்னையில் நடந்த
தமிழ் சொற்பொழிவு - Audio, Video மற்றும் புத்தக
வடிவில், Audio CD: Rs 100/-, DVD Rs 400/-

கிடைக்கும் இடம்:
Madhuram Stores
4/11 Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83
Ph: 9442613710

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 07 ஏப்ரல் 2017 | ஏகாதசி |
| 14-15 ஏப்ரல் 2017 | ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபந்யாசம், பெங்களூரு |
| 22 ஏப்ரல் 2017 | ஏகாதசி |
| 07 மே 2017 | ஏகாதசி |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email:helpdesk@madhuramurali.org, Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org





ராதா கல்யாணம், தூத்துக்குடி நாமத்வார், 26-28 February



Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar